செ.வெ.எண்: 04 நாள்:02.01.2017

**புதுக்கோட்டை மாவட்டத்தில் சீமக்கருவேல மரங்களை முற்றிலுமாக அகற்ற போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை நகராட்சியில் நகராட்சி நிர்வாகம் சார்பில் சீமக்கருவேல மரங்கள் அகற்றப்படும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் இன்று (02.01.2017) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரைக்கிளை நிலத்தடி நீர்மட்டத்தை அதிகஅளவில் உறுஞ்சுவதுடன் காற்றிலுள்ள ஈரப்பதத்தை உறிஞ்சி வளரக்கூடிய சீமக்கருவேல மரங்களை வேரோடு அகற்ற உத்தரவிட்டுள்ளது. இதன்படி நமது மாவட்டத்தில் சீமக்கருவேல மரங்களை வேரோடு அகற்றும் வகையில் மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில் புதுக்கோட்டை நகராட்சி 40-வது வார்டுக்குட்பட்ட பிச்சத்தான்பட்டி, 39வது வார்டுக்குட்பட்ட மாலையீடு மற்றும் சண்முகா நகர் ஆகிய பகுதிகளில் உள்ள சீமக்கருவேல மரங்களை நகராட்சி நிர்வாகம் மூலம் அகற்றும் பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. மேலும் பொதுமக்களுக்கு சொந்தமான தனியார் இடங்களில் உள்ள சீமக்கருவேல மரங்களை தாங்களாகவே முன்வந்து அகற்ற வேண்டும். இல்லையெனில் நகராட்சி நிர்வாகம் மூலம் சீமக்கருவேல மரங்களை அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதன் மூலம் நமது மாவட்டத்தில் சீமக்கருவேல மரங்களை முற்றிலுமாக அகற்ற போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, நகராட்சி அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**